2004 ஜூலை 29]

62—

சிறுவர் பூங்கா

***38875—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு அணையில் சிறுவர் பூங்கா மற்றும் படகு சவாரி வசதியை அரசு ஏற்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு அணையில் சிறுவர் பூங்கா மற்றும் படகு சவாரி வசதியை அரசு ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திலுள்ள வாணியாறு அணை என்பது என்னுடைய மொரப்பூர் தொகுதியில் உள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய சொந்த ஊராட்சியிலே இந்த அணை உள்ளது. இது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் கட்டப்பட்ட அணையாகும். ஏற்காடு மலையடிவாரத்தில் இந்த அணை அமைந்துள்ளது. நல்லதொரு இயற்கையான சூழலில் இந்த அணை இருக்கிறது. பல கிராமங்கள் அந்தப் பகுதியில் உள்ளன. இந்த அணையின் அருகிலேயே பொம்மிடி இரயில் நிலையமும் உள்ளது. அந்தப் பகுதிக்குப் பொழுதுபோக்கு அம்சம் எதுவும் இல்லை. தற்போது சுற்றுலாப் பயணிகளுடைய வருகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே ஏற்கெனவேயுள்ள சிறுவர் பூங்காவை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஊராட்சியினுடைய வருவாய் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே அந்த அணையில் ஒரு Boat House—படகுக் குழாம் ஒன்றை—ஏற்படுத்த நம்முடைய அரசு முன்வருமா? அந்தப் படகுக் குழாம் அமைத்தால் அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவருகிற வகையிலேயும், அந்த ஊராட்சியினுடைய வருவாய்யைப் பெருக்குகின்ற

வகையிலேயும் அமையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, இந்தச் சுற்றுலாப் பயணிகளுடைய வருகையை முன்னிட்டு படகுக் குழாம் அமைப்பதற்கும், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள அந்தச் சிறுவர் பூங்காவை விரிவுபடுத்துவதற்கும் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஏற்காடு மலையடிவாரத்தில் வாணியாறு உள்ளது. ஏற்காட்டில் பெய்யும் மழையால் வாணியாறுக்குத் தண்ணீர் கிடைக்கப்பெறுகிறது. வாணியாறு அணை 1981–ல் தொடங்கப்பட்டு 1985–ல் கட்டி முடிக்கப்பட்டது. இது தருமபுரி மாவட்டத்தில் இரண்டாவது பெரிய அணையாகும். அணையின் உயரம் 65 அடியாகும். இந்த அணை மலைகள் சூழ்ந்த இயற்கையான சூழ்நிலையில் அமைந்துள்ளது. சேலத்திலிருந்து 46 கிலோ மீட்டர் தொலைவிலும், பொம்மிடி இரயில் நிலையத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. பாசன வசதிக்காக இந்த அணை கட்டப்பட்டுள்ளது. வாணியாறு அணைப் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள மாநில சுற்றுலாத் துறை ரூ.3,50,000 நிதி ஒதுக்கீடு செய்து வாணியாறு அணைப் பகுதியில் ஓய்வுக்கூடம், கழிப்பிட வசதி மற்றும் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மழைக் காலங்களில் மட்டுமே அணைக்கு நீர்வரத்து உள்ளது. மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே சுற்றுலாப் பயணிகள் இந்த அணைப் பகுதிக்கு வருகின்றனர். வாணியாறு அணையில் படகு வசதி செய்யவும், அணையைச் சுற்றிச் சிறுவர் பூங்கா அமைக்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் ஆலோசனை பெற்று அரசு நிதிநிலைக்கேற்ப சிந்தித்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என். ரெங்கநாதன்.

திரு. என் ரெங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, பூம்புகார் கடற்கரையில் சிறுவர் பூங்கா ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதியில் ஏற்கெனவே சிறுவர் பூங்கா இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 63, டாக்டர் (திருமதி) ஆ. கருப்பாயி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

63—

பணி நிரந்தரம்

***35441—டாக்டர் (திருமதி) ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, காவேரி நகரில் தைலா சில்க் ஸ்பின்னிங் மில் நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்திட சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இவ்வுலகில் நான் பெற்ற பெரும் பாக்கியம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொண்டனாய் வாழ்வதுதான். காக்கி உடையை அணிந்து கொண்டு சாதாரண போக்குவரத்துத் தொழிலாளியாக இருந்த என்னை தொழிலாளர் நலத் துறை அமைச்சராக்கி எனக்குப் பெருமையைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். தமிழக சரித்திரத்திலேயே சாதாரண ஒரு தொழிலாளியாக இருந்த என்னை தொழிலாளர் நலத் துறைக்கு அமைச்சராக்கி, உழைக்கும் வர்க்கத்தின் உணர்வுகளைப் புரிந்து, உழைப்பதற்கு உத்தரவிட்ட உன்னதமான தலைமைதான் அம்மா நீங்கள். அத்தகைய நல்லெண்ணம் மிக்க, நாடு காக்கும் நல்ல இதயம் கொண்ட தாய்க்கு நான் மட்டுமல்ல, என் தலைமுறையே தாள்பணிந்து நன்றியினை இந்த நல்ல நேரத்தில் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

53-200—3a